ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

சுற்றறிக்கை இல.: PS/DASA/Circular/5/2025

2025 ஜூலை மாதம் 07 ஆம் திகதி

மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர் - அனுராதபுரம், புத்தளம், பொலன்னறுவை, அம்பாறை, ஹம்பாந்தோட்டை, மொனராகலை, குருநாகல், பதுளை, மாத்தளை, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு
பணிப்பாளர் நாயகம், கமத்தொழில் திணைக்களம்
ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தி திணைக்களம்
பணிப்பாளர் நாயகம், வனப் பாதுகாப்புத் திணைக்களம்
பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசனத் திணைக்களம்
பொலிஸ்மா அதிபர், இலங்கை பொலிஸ் திணைக்களம்
பணிப்பாளர் நாயகம், சிவில் பாதுகாப்புத் திணைக்களம்
பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம்
பணிப்பாளர் நாயகம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை
தலைவர், இலங்கை மின்சார சபை

**யானை-மனித மோதல் முகாமைத்துவத்துக்கான மாவட்ட ரீதியில் குழுக்களை தாபித்தல்**

ஒழுங்குபடுத்தப்படாத அபிவிருத்தி திட்டங்கள், காட்டு யானைகள் பயணிக்கும் பாதைகள் மற்றும் வாழ்விடங்களை அழித்தல் மற்றும் கடந்த காலங்களில் இடம்பெற்ற செயற்திறனற்ற தலையீடுகள் காரணமாக இலங்கை முழுவதும் அதிகரித்து வரும் மனித-யானை மோதல்கள் மற்றும் அந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கான துரிதமானதும் நன்கு ஒருங்கிணைக்கப்பட்டதுமான நடவடிக்கைகளின் முக்கியத்துவம் பெரிதும் வலியுறுத்தப்படுகிறது. நாட்டின் சுற்றாடல் முறைமை, உயிர் பல்வகைமை மற்றும் சுற்றுலாக் கைத்தொழிலைப் பேணிச் செல்வதற்கான காட்டு யானைகளைப் பாதுகாக்கும் முக்கிய கடமைப்பொறுப்பை இனங்கண்டு, பல்துறை அணுக்கத்தின் மூலம் இந்த நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக பாரியளவு ஆபத்தை எதிர்நோக்கும் வலயங்கள் மற்றும் மாவட்டங்களை இலக்காகக் கொண்டு மாவட்ட ரீதியிலான யானை-மனித மோதல் முகாமைத்துவக் குழுக்களை தாபிப்பதற்கு 2025.06.20 ஆம் திகதி ஏற்புடைய விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் மற்றும் நிபுணர்களுடன் சனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது கௌரவ சனாதிபதியவர்களால் ஆலோசனை வழங்கப்பட்டது.

2. கிராமப்புற வாழ்வாதாரம் மற்றும் தேசிய பொருளாதாரம் ஆகியவற்றின் மீது பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தும் தொடர்ந்தும் தீவிரமடைந்து வரும் இந்த காட்டு யானைகள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உடனடி மற்றும் முறையான சமூக-பதில்வினையாற்றக் கூடிய மற்றும் விளைவுசார்ந்த பொறிமுறை ஒன்றை நடைமுறைப்படுத்தல் மற்றும் யானை-மனித மோதலைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள மாகாண மற்றும் மாவட்ட மட்ட அரச நிறுவனங்கள் எதிர்நோக்கும் ஊழியர் பற்றாக்குறை, குறைந்த அளவு போக்குவரத்து வசதிகள், போதுமான தொழில்நுட்ப உபகரணங்கள் இல்லாமை மற்றும் குறிப்பாக வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் எதிர்கொள்ளும் ஏனைய செயற்பாடுகள் மற்றும் நிர்வாக ரீதியான சவால்களுக்கு மாவட்ட மட்டத்தில் உடனடித் தீர்வுகளை வழங்குதல் மற்றும் யானை-மனித மோதல் முகாமைத்துவம் மற்றும் தீர்வுகளை இனங்காணல் மேற்குறித்த முகாமைத்துவக் குழுவின் பிரதான நோக்கமாகும்.

ගාලු මුවදොර, කොළඹ 01.
காலி முகத்திடல், கொழும்பு 01.
Galle Face, Colombo 01.

දුරකථන / தொலைபேசி / Telephones: +94 (0) 11 2354418, +94 (0) 11 2473873
ෆැක්ස් / தொலைநகல் / Fax: +94 (0) 11 2446657
ඊ - තැපැල / மின்னஞ்சல் / E-mail: prsec@presidentsoffice.lk

Scanned with CamScanner

3. அதன்படி

3.1 அடையாளம் காணப்பட்ட முன்னுரிமை மாவட்டங்கள் (அனுராதபுரம், புத்தளம், பொலன்னறுவை, அம்பாறை, ஹம்பாந்தோட்டை, மொனராகலை, குருநாகல், பதுளை, மாத்தளை, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு) தொடர்பாக அறிவியல் சார்ந்த அறிவு மற்றும் மனித-யானை மோதல்களை முகாமை செய்வதற்கும் அவற்றுக்கான நிரந்தர தீர்வுகளை வழங்குவதற்குமான விஞ்ஞான ரீதியான அறிவு மற்றும் பங்களிப்புச் செய்வதற்கும் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவொன்று 2025.07.31 ஆம் திகதிக்கு முன்னர் தாபிக்கப்படல் வேண்டும்.

3.2 அதற்காக, பின்வரும் நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்டத்திற்கு தனித்துவமான அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களை உள்ளடக்க முடியும்.

i. மாவட்ட செயலாளர் (தலைவர்)
ii. மாவட்ட வன உத்தியோகத்தர்
iii. மாவட்டத்திற்குப் பொறுப்பான வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்
iv. மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர்
v. மாவட்ட விவசாய பணிப்பாளர்
vi. மாவட்ட கமநல அபிவிருத்திப் பிரதி / உதவி ஆணையாளர்
vii. பிரதிப் பொலிஸ்மா அதிபர் அல்லது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்
viii. மாவட்ட சிவில் பாதுகாப்புப் படைப் பிரதானி
ix. மகாவலி வலய முகாமையாளர்
x. மாவட்ட மின்சார அத்தியட்சகர்
xi. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதி / உதவிப் பணிப்பாளர்
xii. பாதிக்கப்பட்ட பகுதிகளின் பிரதேச செயலாளர்(கள்)
xiii. பிரதேச சபைத் தலைவர்(கள்)
xiv. இராணுவ பிரதிநிதி (தேவைப்பட்டால்)
xv. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரால் பரிந்துரைக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் (4 அல்லது 5)
xvi. ஏற்புடைய மாகாண சபையின் விடயத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட அலுவலர் ஒருவர்
xvii. மாவட்டத்தின் ஏற்புடைய உள்ளூராட்சி நிறுவனங்களின் அலுவலர்கள்
xviii. பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள பிரதேச சிவில் சமூக அமைப்புக்கள் / அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள்
xix. ஏனைய நிபுணத்துவ உறுப்பினர்கள்

4. இக்குழுவால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் நெருக்கமான ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பொருத்தமான பல்துறை மூலோபாயங்கள் மற்றும் பிரயோக ரீதியில் நடைமுறைப்படுத்த முடியுமான தீர்வுகளை அடையாளம் காணல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டத்தை தயாரிப்பதன் மூலம் உயிர்கள், சொத்துக்கள், விவசாயப் பயிர்கள், வாழ்வாதாரங்கள் மற்றும் வனவிலங்குகளைப் பாதுகாத்தல் மற்றும் யானை-மனித மோதலை பயனுள்ளவாறு குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

Scanned with CamScanner

5. அதற்காக, பின்வரும் முக்கிய செயற்பாடுகள் மீது கவனம் செலுத்தி ஏற்புடைய திட்டங்களைத் தயாரித்தல் பொருத்தமானதென வலியுறுத்துகின்றேன்.

5.1 யானை-மனித மோதலால் அவதானத்துக்கு உள்ளாகும் கிராமங்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களை அடையாளம் காணல்.

5.2 அவதானத்துக்கு உள்ளாகும் பகுதிகளில் குறைந்தபட்சம் கடந்த 05 ஆண்டுகளில் பதிவான மோதல் சந்தர்ப்பங்களில் யானைகளின் நடத்தையின் தன்மை குறித்து முடிவுகளை எட்டுதல்.

5.3 இங்கு ஒவ்வொரு ஆண்டும் காட்டு யானைகள் கிராமங்களுக்குள் நுழைதல், பயிர்ச்செய்கை முறைக்கு அமைவாக மற்றும் காட்டு யானைகள் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு இடம்பெயரும் காலஎல்லை பற்றி மாதாந்தம் தகவல்களை ஆராய்தல்.

5.4 மோதல் முகாமைத்துவம் மற்றும் தீர்வு பற்றிய ஆய்வின் போது அருகிலுள்ள மாவட்டங்களைப் பாதிக்கும் விடயங்கள் எழுந்தால், கூட்டு மாவட்ட முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்துதல்.

5.5 ஆய்வு செய்யப்பட்ட தகவல்கள் குறித்து கிராமவாசிகள் முதல் உயர் மட்டம் வரை அனைத்து தொடர்புடைய தரப்பினர்களுக்கும் தெரிவித்து கிராமங்களுக்கு ஏற்ப முகாமைத்துவம் மற்றும் தீர்வுக்கான முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்.

5.6 அதன்படி, மோதல் வலயங்கள், அவதானங்களை மதிப்பீடு செய்தல், இழப்பீடு வழங்குதல், நீதிமன்றத் தீர்ப்புக்கள் உள்ளிட்ட தொடர்புடைய விழிப்புணர்வுகளை உடனடியாக மேற்கொள்வதற்கான செயலி ஒன்றை உருவாக்கும் சாத்தியக்கூறு பற்றி ஆராய்தல்.

5.7 துரித பதிலளிப்பு பொறிமுறைக்கான 1992 துரித தொலைபேசி இலக்கம் மற்றும் மாவட்டத்தில் தொடர்புகொள்ள முடியுமான சம்பந்தப்பட்ட அலுவலர்களின் தொலைபேசி இலக்கங்கள் தொடர்பில் பாதிப்புக்கு ஆளாகக்கூடிய மக்களுக்கு அறிவித்தல் மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான அலுவலர்களின் உடனடி பதில்களை உறுதிசெய்தல்.

5.8 சமூக பங்கேற்புடன் சூழல் வரையறைகளின் பிரகாரம் யானை வேலிகள் அமைக்கப்பட வேண்டிய பகுதிகள் மற்றும் யானை வேலிகள் புனரமைக்கப்பட வேண்டிய பகதிகளை உரிய முறையில் இனங்காணல், அபாயத்தின் தன்மைக்கு ஏற்ப நிர்மாணப் பணிகளை முன்னுரிமைப்படுத்தல்.

5.9 யானை வேலிகளைப் பராமரித்தல், அதனை அண்டிய பருவகால புதர்களை அகற்றுதல் மற்றும் தற்காலிக பயிர்ப் பாதுகாப்பு வேலிகள் கட்டுவதற்காக சம்பந்தப்பட்ட விடயத்திற்குப் பொறுப்பான நிறுவனங்களை வழிநடாத்துதல் மற்றும் இதற்காக சமூக / சிவில் பாதுகாப்புப் படைகளின் உதவியினைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான திட்டத்தை தயாரித்தல்.

5.10 காவல் அரண்களை அமைப்பதன் மூலம் இரவுநேர பாதுகாப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

5.11 ஒருங்கிணைந்த நடமாடும் ரோந்துகளை நடாத்துவதன் மூலம் மக்களின் உயிர்கள், சொத்துக்கள் மற்றும் பயிர்களுக்கு சேதம் ஏற்படுவதைத் தடுத்தல்.

5.12 மனித-யானை மோதல்களைக் கட்டுப்படுத்துவதற்கு பங்களிக்கக்கூடிய நிறுவனங்களுக்குத் தேவையான ஊழியர்கள், வாகனங்கள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களை முறையாக மதிப்பீடு செய்து தகவல்களைப் பெறுதல்.

5.13 இப்பணிகளுக்காக பாதிக்கப்பட்ட பகுதிகளில் செயற்படும் தனியார் நிறுவனங்களிடமிருந்து பெறக்கூடிய தன்னார்வ ரீதியான உதவியை அடையாளம் காணல்.

Scanned with CamScanner

6. மேற்குறித்த பிரதான நடவடிக்கைகள் பற்றிக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்காகவும் அடையாளம் காணப்படும் குறுங்கால / நடுத்தர கால / நீண்டகால முகாமைத்துவம் மற்றும் தீர்வுகான முன்மொழிவுகளை உள்ளடக்கிய செயற்பாட்டுத் திட்டம் (Action Plan) மற்றும் குறுங்கால செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் (Implementation Plan) திட்டம் தயாரிக்கப்பட்டு ஒருமாத காலத்திற்குள் (2025.09.01 ஆம் திகதிக்கு முன்னர்) சனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட மேலதிக செயலாளரிடம் (அபிவிருத்தி நிர்வாகம்) சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7. இச்சுற்றறிக்கை மூலம் யானை-மனித மோதல் முகாமைத்துவத்திற்கான மாவட்ட மட்ட குழுக்களை உடனடியாக தாபித்தல், செயல்வலுப்படுத்தல் மற்றும் அனைத்து அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் தரப்பினர்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொண்டு மேற்குறித்த செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியதன் தேவைப்பாடு பற்றி சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்களுக்குத் தெரிவிப்பதுடன் பொதுமக்கள் மற்றும் காட்டு யானைகள் ஆகிய இருசாராரினதும் பாதுகாப்பை உறுதிசெய்தல் மற்றும் இலங்கையின் சுற்றாடல் மற்றும் உயிர்பல்வகைமை மரபுரிமையை பாதுகாப்பதற்காக இந்த வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாக பின்பற்றுதல் கட்டாயம் என்பதை வலியுறுத்துகின்றேன்.

8. இப்பணிகளை மேற்கொள்ளும் போது அரசால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி செயற்பட வேண்டும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

**ஒப்பம் / கலாநிதி என் எஸ் குமாநாயக்க**
சனாதிபதியின் செயலாளர்
தொலைபேசி: + 94 11 2354420 தொலைநகல்: + 94 11 2446657
மின்னஞ்சல்: prsec@presidentsoffice.lk

பிரதிகள்:

1. செயலாளர், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
2. செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
3. செயலாளர், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
4. செயலாளர், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
5. செயலாளர், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு
6. செயலாளர், சுற்றாடல் அமைச்சு
7. பிரதம செயலாளர் – வடக்கு, வடமத்திய, கிழக்கு, வடமேல், தெற்கு, ஊவா, மத்திய

Scanned with CamScanner